**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

முன்னிலை :- திரு.M. ரவிச்சந்திரன்,பி.ஏ.,பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, பட்டுக்கோட்டை

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு2053-ஸ்ரீசுபகிருது வருடம் ஐப்பசித் திங்கள் 1 ஆம்நாள்

**அசல் வழக்கு எண் 33/2020**

**(CNR No.TNTJ 10-000-186-2020)**

மீ. மு. உசேன் . . . வாதி

/எதிர்/

1. தனரோஜா
2. பிரியா
3. வளர்மதி
4. திருநாவுக்கரசு
5. ராஜம்
6. சுப்பிரமணியன் . . . பிரதிவாதிகள்

இவ்வழக்கு 15.10.2022-ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வீ. பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி. வையாபுரி அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக கொண்டும், வாதி தரப்பில் விசாரணைக்காக வாய்தா எழுந்த நிலையில், வாதியை நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாததாலும், வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாத நிலையில், என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.....

**தீர்ப்புரை**

1. தாவா சொத்து வாதிக்கு உரிமையும், அனுபோகமும் உள்ளதென்று விளம்புகை செய்தும், அதன் காரணமாக தாவா சொத்தில் எப்போதும்போல் வாதி அமைதியாக அனுபோகம் செய்வதை எதிர்வாதிகளோ, அவரது ஆட்களோ எந்த கால்திலும் எந்தவித

தடை தகராறும் செய்யாமல் இருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் வாதிக்கு இந்த வழக்கின் செலவுத்தொகை பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வாதி தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. எனவே வாதியை நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாததால், வாதியின் வழக்கானது வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ம் நாளான இன்று இத்தீர்ப்புரை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**Sd/- M. Ravichandran,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பட்டுக்கோட்டை